(இ) இல்லை என்றால், தாலுக்கா அலுவலகங்களிலும், கலெக்டர் அலுவலகங்களிலும், இதேமாதிரி கித்தானைப் பயன் படுத்தும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, குறிப்பாக நம் தமிழகத்தில் இது இன்னும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. ஜமாபந்தி ரிக்கார்டுகளையெல்லாம் கித்தானிலே கட்டிக்கொண்டு போகிறார்கள். குறிப்பாக மதுரையிலே இம் மாதிரிச் செய்கிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களிலே இந்த நிலைமையைக் காணோம். தென் ஆர்க்காடு ஜில்லாவிலே கயிற்றிலே கட்டிக் கொண்டு போகிறார்கள். கித்தானிலே கட்டிக்கொண்டு போனால் தீட்டு ஒட்டாமல் இருக்கும், துணியிலே கட்டிக்கொண்டு போனால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்று அங்கேயுள்ள பிரமுகர்கள் எல்லாம் சொன்னார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் தான் நான் இல்லை என்று சொன்னேன்.

திரு. அ. ரா. ராமசாமி : இந்த ஜமாபந்தி முறையையே எடுத்து விட்டு தணிக்கை போன்ற முறையை ஏற்படுத்துவார்களா ?

கனம் சபாநாயகர் : இந்தக் கேள்வி கித்தானைப்பற்றியதுதான். The hon. Member is raising the question of "Jamabandi" itself.

ஊமங்கலம் கிராம மணியம் தற்காலிக வேலை நீக்கம்

***84 கேள்வி—திரு. நா. இராசாங்கம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் ஊமங்கலம் கிராம இசும் மணியம், நிலவரியிலும், பஞ்சாயத்து வரியிலும் நிலுவை நின்ற, மற்றும் கையாடல் காரணங்களுக்காக சஸ்பெண்ட் செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர் மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

(உ) அவர் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கிறாரா ?

(எ) ஆம் எனில், அவரிடமிருந்து, அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகை முழுவதும் வசூலாகி விட்டதா. எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) நிலவரி, மற்றும் கடன் நிலுவைகளை விறுவிறுப்பாக வசூல் செய்யாதது காரணமாக இசும் மணியம் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். கையாடல் காரணங்களுக்காக அல்ல.

4th August 1966]

(இ) ஆறு மாத தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

(உ) ஆம். தற்காலிக வேலை நீக்க காலம் முடிந்த பின்னர் 26—2—1966-ல் அவர் வேலையில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப் பட்டார்.

(எ) அவரிடமிருந்து அரசாங்கத்திற்குத் தொகை எதுவும் சேரவேண்டியதில்லை.

திரு. நா. இராசாங்கம் : தலைவரவர்களே, இந்த மணியக்காரர் சர்க்காருக்குச் சேரவேண்டிய தொகையைக் கட்டிய பிறகு மறுபடியும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா அல்லது கட்டவேண்டும் என்று சொல்லி வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப் பட்டாரா?

கனம் திரு. வெ. ராமையா : நான் பதிலில் அவர் கையாடல் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, அவர் திருப்பிக் கட்டவேண்டிய நிலைமை இல்லை.

Food articles without valid permits

*85 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that consignments of more than five hundred bags of wheat without valid permit were seized by the Vigilance Cell of the C.I.D. Police at the Coimbatore Railway Goods Shed; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) A consignment of 561 bags of indigenous wheat booked from Northern States without valid permit, was seized by the Vigilance Cell (C.I.D.) of Police at Coimbatore Railway goods yard on 16th December 1965 since the transport of wheat and its products in the statutory rationed area of Coimbatore with effect from 1st December without valid permit is an offence under Section 5 of the Madras Rationing Order 1965.

திரு. வை. சங்கரன் : இது யார் யாருக்கு அனுப்பப்பட்டது? யார் யார் இந்த 'அஃபென்ஸ்' புரியக் காரணமாக இருந்தார்கள்? அவர்களைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

*86 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that more than 1,300 bags of toor dhall without permit were sezied by the C.I.D. in the Coimbatore Railway Goods Shed ; and

(*b*) if so, the details thereof ?